## பரிசோதனை எப்படி செய்வது?

உங்களிடம் பரிசோதனை மேற்கொள்ளச் சொல்லி வந்த கடிதத்தில் இரண்டு ஒட்டும் வில்லைகள் இருந்தால் 1 மற்றும் 2 எனக் குறிப்பிட்டுள்ள செயல்களைச் செய்து பின் 3 க்குச் செல்லவும். உங்களிடம் கடிதம் இல்லையென்றால் நேராக கீழே கொடுக்கப்பட்டுள்ள 1பிஸ் ஸுக்குச் செல்லவும்.



பெரிய வில்லையை அடையாளம் காட்டும் படிவத்தின் மீது ஒட்டவும். இது உபகரணத்தின் மத்தியில் உள்ளது. பிறகு இந்த படிவத்தைப் பூர்த்தி செய்யவும்..



சிறிய வில்லையின் மீது பரிசோதனை செய்த தேதியைக் குறிப்பிடவும். பிறகு அதை டியூபின் தட்டையான பகுதியில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டவும்.



«பெயர்»,«தேதி» ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. உபகரணத்தின் மத்திய பகுதியில் உள்ள அடையாளச் சீட்டு மற்றும் வில்லையைக் கவனமாகப் பூர்த்தி செய்யவும்.



வில்லையை டியூபின் தட்டையான பகுதியில் <<பெயர்>>, <<தேதி>> ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது என்று எழுதியுள்ள இடத்தில் ஒட்டவும். பின் 3 வது நிலைக்குச் செல்லவும்.



பரிசோதனைக்கு மலம் சேகரிக்கும் காகிதத்தை தானே ஒட்டிக் கொள்ளும் டேப்களின் உதவியுடன் டாய்லெட்டின் விளிம்பில் ஒட்டவும். காகிதத்தின் நடுவே சிறு பள்ளம் வருமாறு லேசாக அழுத்தவும்.

முக்கியக் குறிப்பு: பரிசோதனை சரியாக வருவதற்கு அதற்காக எடுக்கும் மலத்துடன் எந்தவித திரவமும் படாமல் இருப்பது அவசியம் ( சிறுநீர், ப்ளீச்..)



மூடியைத் திருப்பி டியூபைத் திறக்கவும்.



கொடுக்கப்பட்டிருக் கும் குச்சியால் எடுக்கப்பட்ட மலத்தின் மேல் பல முறை தேய்க்கவும்..



குச்சியின் கோடிட்ட பகுதி முழுவதும் மலத்தால் மூடப்பட்டிருக்க வேண்டும்.



டியூபை மூடிவிட்டு அதை வேகமாகக் குலுக்கவும்.



வில்லைகளைச் சரியாகப் பூர்த்தி செய்துள்ளீர்களா மற்றும் நன்கு ஒட்டியுள்ளீர்களா என்று சரி பார்க்கவும். டியூபைப் பாதுகாப்பு உறையில் நுழைக்கவும்.



டி உறையில் :

- டியூப் உள்ள பாதுகாப்பு உறையையும்
- பூர்த்தி செய்த அடையாள வில்லையையும்

வைக்கவும்.

பிறகு உறையை மூடவும்.



டி உறை சோதனைக்கு ப் பொருள் எடுத்ததிலிருந்து 24 மணி நேரத்திற்குள் தபாலில் அனுப்பப்படவேண்டும்.

சோதனையின் முடிவு 15 நாட்களுக்குள் தபால் மூலம் அனுப்பப்படும். இணைய தளம் மூலம் பெற விரும்பினால் தயவு செய்து www.resultat-depis tage.fr என்கிற தளத்தில் பதியவும்.

## + தகவல்:

- உங்கள் மருத்துவரிடம்
- e-cancer.fr இணைய தளத்தில் ட்ராக்கிங் தலைப்பின் கீழ்.
- திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரையிலும் மற்றும் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையிலும் 0805123124 என்ற தொலைபேசியில் (உள்ளூர் அழைப்புக் கட்டணம்)
- உங்கள் மாவட்டதிதில் உள்ள தகவல் பொறுப்பாளரிடமிருந்து.

## சந்தேகங்கள்:

- எந்த காலத்திற்குள் சோதனையை முடிக்க வேண்டும்?
காலாவதி ஆகும் தேதி டியூபின் மேல் குறிக்கப்பட்டுள்ளது.

- டியூபை நான் தொலைத்து விட்டேன்/ டியூப் வீணாகி விட்டது. நான் என்ன பண்ணுவது?
உங்கள் மருத்துவரை அணுகி புது பரிசோதனைக்குக் கேட்கவும்.

- சோதனைக்கு சாம்பிள் சரியாக எடுக்க முடியவில்லை என்ன செய்வது?
உங்கள் மருத்துவரை அணுகவும் அல்லது உங்கள் வட்டத்தில் உள்ள சோதனை அலுவலகத்தில் விசாரிக்கவும். அவர்கள் உங்களுக்கு ஆலோசனை கொடுத்து ஒரு புது பரிசோதனைக்கு ஏற்பாடு செய்வார்கள்.